பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 06 புதன்கிழமை (20.06.2001) தொலைபேசி: 3378 ஒலி: 191

## ★ இந்தியா பாகிஸ்தானுடன் பேசமுடியுமானால் "பிரபா"வுடன் ஜனாதிபதி ஏன் பேச முடியாது?

### சர்வமதக் குழுவினரிடம் சுவாமி சித்ரூபானந்தா கேள்வி

(அலுவலக நிருபர்)

இந்தியாவின் பகை நாடான பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப்பை பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார் என்றால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஜனாதிபதி சந்திரிகா ஏன் பேச்சுவார்த்தைக்கு அழைக்கக் கூடாது?

இவ்வாறு பருத்தித்துறை சாரதாசேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தென்னிலங்கையில் இருந்து வந்த சர்வமதக் குழுவினரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.செயலக கேட் போர் கூடத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம்தலைமையில் தென் னிலங்கையில் இருந்து வந்தசர்வமதக்குழுவினருடனான சந்திப்புநேற்றுக் காலை 10,00 மணியளவில் நடை பெற்றது,

இச்சந்திப்பில் சுவாமி சித்ரு பானந்தா தொடர்ந்து பேசுகையில்

இனப்பிரச்சினைதீர்வுக்காக இன்று வரை எத்தனையோ குழுக்கள் நியமிக்கப் பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## மண் மீட்புப் போரில் இதுவரை 17 ஆயிரத்து 211 பேர் மாவீரர் ஆகினர்

1982ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ந் திகதி முதல் 2001ம் ஆண்டு மே மாதம் 31ந் திகதி வரை 17 ஆயிரத்து 211 மாவீரர்கள் வீரமரணமடைந்துள்ளதாக புலிகளின்குரல் வானொலி தகவல் வெளியிட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் மாவீரர் பணிமனை விடுத்திருக்கும் மாவீரர் பட்டியலில் உள்ள விபரம் வருமாறு;

- கரும்புலிகள் 217 இதில் தரைக்கரும்புலி 78, கடற் கரும்புலிகள் 139, இவர்களில் 160 ஆண்கரும்புலிகளும் 57 பெண்கரும்புலிகளும் அடங்குவர்.
- எல்லைப்படைவீரர்- ஆண்கள் 266, பெண்கள் 05

மாவட்ட ரீதியாக மாவீரர் விபரம் வருமாறு;

- யாழ்ப்பாணம் → 6337 பேர்
- மட்டு அம்பாறை → 4418 பேர்
- வன்னி → 2462 பேர்
- திருமலை → 1336 பேர்
- முல்லைத்தீவு → 1252 பேர்
- மன்னார் → 1013 பேர்
- ஏனைய மாவட்டங்கள் → 297 பேர் (ம)

## பிரிட்டிஷ்தூதர் இன்று யாழ் வருவார்

[கொழும்பு]

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் லிண் டா டபீல்ட் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மூவின மக்கள் ஒற்றுமையுடன் வாழ யுத்தம் ஒழியவேண்டும்

பேராசிரியர் கும்புறு வே வவஜிரதேரர் இக்கருத்தரங்கில் பேசும்போது கூறியதாவது;

இந்நாட்டில் கொழுந்துவிட்டெரியும் கொடியயுத்தமென்னும் தீயை அணைத்து முடிவுக்குகொண்டுவந்து மூவினமக்களும் சமாதானமாக வாழவேண்டும்.

சர்வமதக் குழுவினரும் இத்தகைய சமாதான முயற்சிகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் இடையே சுமூகமான கருத்துப்பரிமாற்றம் நடைபெற வேண்டும்.

பரஸ்பரம் ஒருவரைஒருவர் புரிந்து கொள்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணவும் அரசியல்வாதிகளேஇனப்பிரச்சினையை பெரிது படுத்தியுள்ளனர் இன்நிலையை மாற்றி நாம்சமாதான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றுகூறினார். [வ-9]

## விதவைகளும் அநாதைகளுமே யுத்தம் நமக்குத் தந்த பரிசு

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தனது உரையில் கூறியதாவது;

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் கொடிய யுத்தத்தின்கொடுமையினால் தினமும் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. அநாதைக்குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

எனவே இக் கொடிய யுத்தத்திற்கு முடிவுகட்டி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை சர்வமதக்குழுவினராகிய உங்கள்கைகளில்தான் தங்கியுள்ளது.

எனவே இதனைதென்னிலங்கை மக்களுக்கு விளக்கி யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்க்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (வ-77)

## விடுதலை புலிகள் மீதான தடையை தற்காலிகமாவது நீக்கவேண்டும்

### சர்வமதக் குழுவிடம் பேராசிரியர் சிற்றம்பலம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு தசாப்த காலங்களாகத் தொடர்ந்து வரும் இன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதானதடையைத் தற்காலிகமாகவேனும் அரசு நீக்கிவிட்டு அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் சர்வமதக் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். இந்து மதகுருமார் சர்வமதக்குழுவினரை நல்லூர் சிவன் கோவிலில் நேற்று மாலை சந்தித்துப்பேச்சுநடத்தியபோதே பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் மேற்கண்ட வேண்டுகோளை சர்வமதக் குழுவினரிடம் விடுத்தார்.

இந்துமத ஒன்றியத்தின்சார்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபால கிருஷ்ணஐயர், உட்பட பலரும் கலந்து கொண்டனர். சர்வமதக்குழுவினரிடம் அவர் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அமெரிக்காவில் இருப்பது போன்றதொரு சமஷ்டி அரசு உருவாக வேண்டும்; அதன் மூலம் எமது உரிமைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளான .சிறிலங்கா சுதந்திரக்

(8-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வீதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக் கிழமை இராணுவத்தினர் பல்கலைக் கழக வளாகத்தை சுற்றிவளைத்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையைக்கண்டித்தும்வவுனியாவில்இராணுவத்தினர் கைது செய்து தடுத்து வைத்திருக்கும் கிழக்குப் பல்கலைக்கழகமாணவன் சுந்தரலிங்கம் செல்வராஜாவை விடுதலை செய்யக் கோரியுமே பகிஷ்கரிப்பும் வீதி ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் ஒருவர்சுட்டுக் கொலை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவிலடியில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இனந்தெரியாத பிஸ்டல் குழுவினர் சுட்டதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த 5பிள்ளைகளின்தந்தையானதம்பு சந்திரசேகரம் (வயது-44) (விநாயகர் ஸ்ரோர்ஸ்உரிமையாளர் என்பவரே உயிரிழந்தவராவர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் பிரஸ்தாப நபரின் சடலம் ஒப்படைக்கப்பட்டு. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(இ-10-06-43-104-77)

## படையிலும், பௌத்தத்திலும் சேர அதிக குழந்தைகளை பெறவேண்டும்

### சிங்களவருக்கு பிரதமர் அறிவுரை

(கொழும்பு)

படைத்தரப்பிலும் பௌத்தபீடங்களிலும் ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக்குறையை நீக்க சிங்களமக்கள் குடும்பக்கட்டுப்பாட்டுமுறையைத் தூக்கியெறிந்துவிட்டு அதிகளவுகுழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சிங்களப் பெற்றோருக்கு பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரம நாயக்கா ஆலோசனைகூறியுள்ளார்.

பௌத்தமத சடங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவிக்கையில்

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்தத்தில் தோல்வியடையச் செய்வதற்குபடையில் ஆளணி போதாமல் உள்ளது. அத்துடன் பௌத்தபீடங்களில் பிக்குகளின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதால்பௌத்தசமயத்திற்கு சேவையாற்றுவோர் குறைவாகவே யுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சி கிழக்கின் அவல நிலை அமைச்சர் டக்ளஸ் கவனத்திற்கு

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்கு தனியான ஒருபிரதேச சபை அமைத்துத் தருமாறு கோரி வடமராட்சிகிழக்கு இடம்பெயர்ந்தோர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றினைக்கையளித்துள்ளனர்,

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மீனவர்கள் 30மைல் நீளமான கடல்பிரதேசங்களையும் தொழில் வளங்களையும் உபகரணங்களையும் இழந்துள்ளனர் விவசாயிகள் தொழில் உபகரணங்களை இழந்து எந்தவித உதவியுமின்றியுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இயங்காமல் இருக்கும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையை மக்கள் செறிவாக வாழும் தும்பளை, நெல்லண்டைப்பகுதியில் அமைத்து மக்களின் ஒருபகுதி தேவையாவது பூர்த்தி செய்ய வேண்டும்

எமது பிரதேசத்தில் அமைந்துள்ள 17 பாடசாலைகளில் 5பாடசாலைகளே முழுமையாக செயற்படுகின்றன ஏனைய பாடசாலைகள் ஆளணி, உபகரணங்களின்றி ஏனோ தானோ என்ற ரீதியில் செயற்பட்டு வருகின்றன.

பிரதேசத்திற்கான மரண விசாரணை அதிகாரியின்வெற்றிடம் நீண்டகாலமாக நிரப்பப்படாதிருப்பதால் மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

99.2000ஆண்டுகளில் ஏற்பட்ட திடீர் இடம்பெயர்வால் பலர் அடையாள அட்டைகளை இழந்துள்ளனர், இவற்றினை பெறுவதற்கு பிறப்பு அத்தாட்சிபத்திரம், திருமணப் பதிவுப்பத்திரம், ஆகிய வற்றையும் இழந்துள்ளனர்.

இதனால் முறைப்பாடு செய்வதற்கு ஆவன செய்வதோடு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிறப்பு இறப்பு, திருமணப்பத்திரங்களைபெற ஒழுங்கு செய்யவேண்டும்;

இரண்டு வருடங்களாக இயங்காதுள்ள செம்பியன்பற்று உப அஞ்சல் அலுவலகத்தை தும்பளைப்பகுதியில் இயங்க வைக்கவேண்டும்.

பிரதேச செயலர் பிரிவிற்கெனவடமராட்சிகிழக்குஎன்றபிரதேச சபையை அமைத்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு பிரமாண அடிப்படையிலான நிதி, பன்முகப்படுத்தப்பட்ட நிதி, அமைச்சு நிதி ஆகிய வற்றில் நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உதவவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-23)

## பனையால் வீழ்ந்து மயக்கம்

(யாழ்ப்பாணம்)

30 அடி உயரமான பனை மரத்தில் இருந்து வீழ்ந்தவர் மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் மூளாய் மேற்குப் பகுதியில் நிகழ்ந்த இச் சம்பவத்தில் இராசதுரை சிவநேசன் (வயது-30) என்பவரே மயக்கமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

## உதை பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியில லீக்குகளுக்கு இடையே 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு நடாத்தப்படவுள்ள ''எவரடி'' வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளின் தொடரில் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 1 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில, யாழ் உதைபந்தாட்ட லீக் அணிக்கும் பருத்தித்துறை லீக்அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது: (உ-110)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும், உணவு மற்றும் கடிதங்கள் என்பவற்றினையும் அவர் எடுத்துச் சென்று கைதிகளிடம் ஒப்படைப்பார்.

மேலும் கைதிகளினால் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதத்தினையும் அவர்களின் உறவினரிடம் கையளிப்பார். (உ-10)

## பிறந்தநாள்

(சுண்டுக்குளி)

95 கோடி கத்தோலிக்க மக்களின், ஆன்மீகத் தலைவர் பாப்பரசர் அருட்திரு. 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் தனது 8 வதுபிறந்த நளைக் கடந்தமாதம் 18 ஆம் திகதி கொண்டாடினார். (உ-11)

## கலந்துரையாடல்

(மந்திகை)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9 00 மணிக்கு நெல்லியடியிலுள்ள திருமகள் சோதி வீதியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ. சுப்பிரமணியம்தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் இயக்குநார் சபை உறுப்பினர்களும் கருத்துரைவழங்கவுள்ளனர்.

''சங்கச் செயற்பாடும் தற்போதைய நிலைப்பாடும்'' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறும். (உ-23)

## பாலர் பாடசாலை இடம் மாறும்

[மந்திகை]

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த பாலர் பாடசாலையை நவிண்டில் பகுதியில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுவருவதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். [உ-23]

## ஓவியப் போட்டி

(மந்திகை)

சாவகச்சேரிசுகாதார வைத்திய அதிகாரி பணிமனைதென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவரிடையே நடாத்தவுள்ள ஓவியப் போட்டிக்கான ஆக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன.

ஆண்டு 6 முதல் 8 வரையான மாணவர்கள் 'வீட்டு விபத்துக்களை தவிர்ப்போம்' என்ற தலைப்பிலும்,

9 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரையான மாணவர்கள் நுளம்பினால் வரும் நோயைத்தவிர்ப்போம் என்ற தலைப்பிலும் ஆக்கங்கள் அமைக்கப்படவேண்டும்;

மாணவர்களால் வரையப்படும் ஆக்கங்களைஎதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் தத்தமது பாடசாலை அதிபரூடாக வலயக் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்; (உ-23)

## புதிய இணைப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப. பரஞ்சோதி, இம்மாதம் 13 ஆம் திகதியில் இருந்து றான் அமைப்பின் மாவட்ட இணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளளார். (உ-3)

## யுவதிகள் நலன் கருதி தையல் பயிற்சி நிலையம்

[புலோலி]

பருத்தித்துறைப் பிரதேச கற்கோவளம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் கிராமிய யுவதிகளின் நன்மை கருதி ஒரு தையல் பயிற்சி நிலையத்தினை ஆரம்பித்துள்ளது.

இந் நிலையத்தில்பயிற்சி வகுப்புக்களை பருத்தித்துறை கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதிநவமணி ஜெயராஜா கடந்த 18 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

40 படித்த யுவதிகள் இத் தையல் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். பயிற்சியின் இறுதியில் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கபபடும். [உ. 52]

## வெளி நாடுகளில் உள்ள இல. விஞ்ஞானிகளை வரவழைக்க வெப் தளம் மூலம் பாரிய பிரசாரம்

[கொழும்பு]

வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கைவிஞ்ஞானிகளை இலங்கைக்கு வரவழைக்கும் வகையில் வெப்தளம் மூலம் பாரிய பிரசார இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு இதனை நடைமுறைப்படுத்திவருகிறது.

விஞ்ஞான தொழில் நுட்பத்துறையில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கும், ஆராய்ச்சிப் பணிகளுக்கும் வழிவகுக்கும் நோக்கிலும் அவர்களது திறமைகளையும் அறிவுரைகளையும் இங்குள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம் முயற்சியின் பலனாக வெளிநாடுகளில் வதியும் 27 விஞ்ஞானிகள் இங்கு வருகை தந்து விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், சுவீடன், தாய்லாந்து, சுவிட்சர்லாந்து பிஜி ஆகிய நாடுகளில் உள்ள 27 இலங்கை விஞ்ஞானிகளே இங்கு பணிபுரிய இணக்கம் தெரிவித்துள்ளனர். [உ]

## ஆவணங்களை பாதுகாக்க கச்சேரிகளில் புதியதிட்டம்

(கொழும்பு)

கச்சேரிகளில் பாதுகாத்து வைக்கப்படும் சகலவிதமான திவு ஆவணங்களையும் பதைந்து போகா வண்ணம் சிதுக ப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.
ப
மாவட்டக்கச்சேரிகள் மற்றும், பதிவு அலுவலகங்களில் மேற் கொள்ளப்படும் பதிவுகள் உரிய முறையில் பாதுகாக்கப் படாமையினால் விண்ணப்பதாரிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றமையைக் கருத்தில் கொண்டே இத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. உ)

## தங்கநகை கடத்த முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக தங்க நகை கடத்த முயன்ற இருவரை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்:

துபாயிலிருந்து இலங்கைக்கு வந்த இருவர் மூன்று கிலோ எடையுள்ள24லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை ஈச்சம் பழ பொதிகளுக்குள் மறைத்து இங்கு கொண்டு வர முயன்றனர் என சுங்கப் பணிப்பாளர் மாலினி பியசேன தெரிவித்துள்ளார். (செ)

## மாணவர் மத்தியில் விழிப்புணர்வுப் படக்காட்சி

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுத் திரைப்படக் காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது:

இதன் அடிப்படையில் கரணவாய்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ளபொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் ஒரு திரைப்படக் காட்சி இடம் பெற்றது.

மலேரியா, டெங்கு, எயிட்ஸ் புழு வியாதிகள் தொடர்பான திரைப்படக்காட்சியே காண்பிக்கப்பட்டு வருகிறது? (உ-23)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் அடுத்ததாக 'திராவிட அரசியல்குறித்த மீள் விசாரணையில் தமிழ் சினிமா' என்ற தொடரின் 3 ஆவது படமாக பாரதிராஜாவின் 'என்உயிர்த் தோழன்' எனும்திரைப்படம் எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அருள் மிகு செல்வ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம்திகதி தேர்த்திருவிழாவும், 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (செ)

## மேசைப் பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

யாழ். வை. எம். சி. ஏ யினால் நடாத்தப்பட்ட போட்டியின் இறுதி ஆட்டங்கள் கடந்த 12 ஆம் திகதி வை. எம். சி. ஏ உள்ளரங்கில் நடைபெற்றன,

ஆண்களுக்கான மேசைப் பந்து ஒற்றையர் ஆட்டத்தில் ரிதுமோகன் அவரை எதிர்த்து ஆடிய எஸ். மதிவதனனை வென்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டார்.

ஆண்களுக்கான திறந்த இரட்டையர் ஆட்டத்தில் ஆர். சுகந்தன், பி. ஜெயதாஸ் ஆகியோர் அவர்களை எதிர்த்து ஆடிய ஆர். சி. செந்தில்ராஜா, கே. வி. இம்மனுவல் ஆகியோரை தோற்கடித்து இவ் வருட சம்பியன் ஆகினர்.

திறந்த ஆண், பெண் கலவன் ஆட்டத்தில் ஆர். சுகந்தன். செல்வி எஸ். சிறீமைதிலி ஆகியோர் அவர்களை எதிர்த்து ஆடிய எஸ். குமரேசன், செல்வி எஸ் ரி. தமயந்தி ஆகியோரை வென்று இவ் வருடசம்பியன் ஆனார்கள்; [உ-110]

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

யாழ்பல்கலைக்கழக நுண்கலைபட்டப்படிப்பு சித்திரம் வடிவமைப்புத் துறைக்கான மாணவர் அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

பல்கலைக்கழக விதிகளின் படி உளச்சார்புத் தேர்விலும் நேர்முகத்தேர்விலும் சித்தியடைபவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

சித்திரப்பாடத்தைக. பொ. த சாதாரண தேர்வு உயர்தரதேர்வு முதலியவற்றில் பயிலாதவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

அதாவது வர்த்தகம், விஞ்ஞானம் முதலியதுறைகளில் க. பொ. த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கமுடியும், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

# தேசியஅரசு என்ற சிந்தனையின் பின்னணியில்
# இன வேற்றுமையின் எதிரொலி கேட்கிறது

- யூகி -

தேசிய அரசு அமைக்கும் முயற்சியானது, பார்க்கப் போனால் சிறுபான்மையினத்தின் சிறுகட்சிகள் மீது பெரும்பான்மையினத்தின் பெருங் கட்சிகள் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்று சொல்லலாம். தத்தமது கட்சிகளின் தனித்தனியான இலட்சியங்களையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு இரு பெரும் கட்சிகளாகிய சுதந்திரக்கட்சியும், ஐ. தே. கட்சியும் தம்மை ஒருஅரசாங்கத்தினுள் அடக்கிக்கொண்டாவது, பாராளுமன்றப் பாதையை மட்டுமே தம்மினத்தின் விமோசனத்திற்கு நம்பியிருக்கும் சிறுபான்மையினங்களின் கட்சிகள் ஆட்சியில் தமக்குரிய பங்கில்லாவிட்டாலும் ஆளும் கட்சியில் தாம் கொண்டுள்ள எம். பிக்களின் விகிதாசாரத்தினளவுக்காவது தமது இனத்துக்குரிய பங்கை உரிமையுடன் கேட்டுப் பெற்றுக்கொள்வதைத் தடை செய்வதற்கென்றே உபாயம் வகுப்பதுபோல் தெரிகிறது.

## அதிகாரத்தைத் தடுக்கும் சிந்தனை

இந்தச் சிந்தனையின் பின்னணியில் தான் அன்று எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இன்று முஸ்லிம் காங்கிரஸை ஆட்சியில் அது வகிக்கும் அதிகாரத்தை தடுக்கும் பின்னணியில் உள்ளதும் இந்தச் சிந்தனையே. இந்தச் சிந்தனையானது வடபகுதிக்கு அபிவிருத்திக்கென ஒரு கணிசமானளவு நிதி ஒதுக்கப்படுவதையும் உள்மன விருப்போடு அங்கீகரிக்கப் போவதில்லை. இதற்கான வெளிப்படையான எதிர்ப்பை ஐ. தே. க. தலைவர்கள் சிலமாதங்களுக்கு முன் வெளிப்படுத்தியிருந்தனர்: 1965 இல் ஐ. தே. கட்சியும் தமிழரசுக்கட்சியும் இணைந்து கூட்டாட்சியை அமைத்தபோதுதான் முதன் முதலாக தேசிய அரசு பற்றிய சிந்தனை பரவலாகவும், குறிப்பாக பௌத்த பீடங்களிலும் உருவாகியிருந்தது: ஆனால்ஒரே இனத்தை சேர்ந்த சிறுகட்சிகளை இணைத்து ஒரு கூட்டு அரசாங்கம் அமைத்த 1970–77 ஆண்டுகளில் தேசிய அரசாங்கக் கோரிக்கை எழவில்லை என்பதை நோக்குதல் வேண்டும். அப்போதைய ஆட்சியில் இடதுசாரிகளானாலும், சிங்களத் தலைவர்களைக் கொண்ட கட்சிகள் இணைந்தமையால் அவ்வாறான கோரிக்கை எழவில்லை.

சிறுபான்மைத் தமிழினம் தனது கோரிக்கைகளை கேட்டுப் பாராளுமன்றத்தில் விவாதித்த போதெல்லாம், பாராளுமன்றத்தில் தமிழ் எம் பிக்கள் இத்தனை பேர்கள் இருக்கின்றனரே, இது தமிழர்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமையல்லவா? என்று அன்றைய கூட்டரசாங்கத்தின் பெருந்தலைவர்கள் கூறினர்: சிறுபான்மை எம். பிக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றமே மிகச்சிறந்த இடம் என்று 70-77 காலத்தைய தலைவர்கள் அழுத்தியுரைத்தனர்: அவ்வாறுகூறிய ஆட்சியும் எஸ். பி திசாநாயக்கவின் கட்சியின் ஆட்சிதான். ஒருவேளை, சிறுபான்மை எம். பிக்கள் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டால் நல்லது: அதிகாரத்தில் பங்குகேட்பதுதான் பிரச்சினை என்று சிந்திக்கிறார்கள் போலும். அதாவது அதிகாரத்தில் அவர்கள் பங்குகேட்டால் தேசிய அரசாங்கமே பதில்!

## தேசிய அரசு கோஷம்

இனம் என்றவகையில் ஐக்கியப்பட்டு பாராளுமன்றம் சென்று ஆளும் தரப்பில் இடம்பிடித்துக்கொண்ட அரிதான ஒருசில சந்தர்ப்பங்களிலேயே 'தேசிய அரசு' என்னும் கோஷங்கள் தீவிரமடைந்தன; (1965-70) தீவிரபடைகின்றன. முக்கியமாக இந்த இருகாலப்பகுதிகளைப் போல் தேசிய அரசுக் கோரிக்கை வேறு காலப்பகுதிகளில் தீவிரப்படவில்லை. 65-70 காலப்பகுதியில் அன்றைய டட்லி சேனநாயக்க அரசில் இருந்தபடி தமிழரசுக் கட்சி மாவட்ட சபைகளைக் கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்தது. இன்று முஸ்லிம் காங்கிரஸ் கல்முனைக்கு தனி மாவட்டம்கேட்டு ஆரவாரம் காட்டிவருகிறது. ஏனைய காலங்களில் இனத்துவக்கட்சிகள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு ஒப்புக்காக கோரிக்கைகளை முன்வைத்து ஓலமிட்டுக்கொண்டிருந்தமை வரலாறு. இவ்வாறு இருந்தாலும் இன்றைய நிலை சற்று வித்தியாசமானது.

அதாவது, ஒருகல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் நோக்கில் இன்று தேசிய அரசுக்கோரிக்கை எழுந்துள்ளது. ஒன்று முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைகளை வழங்காமல் அதனை செல்லாக் காசாக்கிவிட வேண்டும். முஸ்லிம்களுக்கோ அல்லது சிறுபான்மையருக்கோ ஒரு தனிநிர்வாக மாவட்டத்தைக் கொடுக்கக் கூடாது. இரண்டு விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தடையை நீக்கவேண்டியேற்பட்டால், அது சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் நிலைவரை தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தங்களால் இழுத்துச் சென்றுவிடக்கூடும் அவ்வாறு சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்டால் தாம் முன்பெல்லாம் வாய்வந்தபடி வீசிய வாய்வீச்சுகளை தாமே நிராகரித்து தம்மைத்தாமே அம்பலப்படுத்த வேண்டியேற்படலாம். அதுவும் சர்வதேசமும், குறிப்பாக மேற்குநாடுகளும் பார்த்திருக்க இவ்வாறு செய்தல் வேண்டும். அதாவது, புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் அரசு, தமிழீழத்திற்கு குறைவான எந்தவொரு கோரிக்கையையும் பரிசீலிக்கத்தயார் என்று பலதடவைகள் அரசுத் தலைவர்கள்கூறிய வார்த்தைகளை என்ன செய்வது?

## உள்நோக்கம் உண்டு

எனவேதான், இதற்குச்சந்தர்ப்பம் கொடாதிருக்க வேண்டுமாயின் தடையை நீக்கக்கூடாது என்று அரசு கருதுகின்றது. தடையை நீக்க மறுக்கும் வேளை தமிழ்க் கட்சிகள் போர்க்கொடி தூக்கி நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு தந்து அரசைக்கவிழ்க்கவும் முடியும் என்ற நிலையுள்ளது. ஆகவே ஐ.தே.க வை தேசியஅரசாங்கம் என்ற பெயரில் விழுங்கிவிட்டால் எப்படியிருக்கும்? இதுவே தேசிய அரசாங்கக் கோரிக்கையின் பின்னணியில் உள்ள சிந்தனை. இதனால் வேறு ஒரு இலாபமும் ஏற்படும். அதாவது, ஐ தே.க. எம்முடன் இணைந்து தேசிய அரசு அமைக்கப்போகிறது, அதற்கிடையில் நாம் எதற்காகக் கட்சிமாறி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று அரசதரப்பு எம்.பி.க்கள் நினைக்கும்படி செய்தல்வேண்டும்.

இதேவேளை ஐ தே.க.வும் ஒரு தேசிய அரசை விரும்புகிறதாம். ஆனால் அதற்கு தாமே தலைமை தாங்க வேண்டுமென்பதால் அரசதரப்பின் சில எம் பிக்கள் தம்முடன் இணையவேண்டுமாம். இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன என்கிறது ஐ.தே.க.' அவ்வாறான ஒரு அரசு அமைந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியற் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றவும் அதனைத் தொடர்ந்து சண்டையைத் தீவிரப்படுத்தவும் முடியும் என்று நம்புகிறார்கள். சிரேஷ்ட அமைச்சரான எஸ் பி. திசாநாயக்கவின் கூற்று இதனை நிரூபிக்கின்றது. அதாவது, தேசிய அரசு ஒன்று அமைந்துவிட்டால், சண்டையை முடிவுக்குக் கொண்டுவரும் விடயத்தில் விடுதலைப் புலிகள் எமக்குச் சாதகமான பதிலையும் தராதுவிட்டால் (இன்றைய நிலை நீடித்தால் என்று அர்பதம்) உலக அரசுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு அரசுக்கு உதவவேண்டும் என்றுகூறியுள்ளார்.

# இராசி பலன்

20.6.2001

(ஆனி 6, புதன்)
சதுர்த்தசி மு இ 7.49 வரை
ரோகினி மு. இ 7.50 வரை
இராகுகாலம் 11.54- 1 24
நல்லநேரம் 4.24- 5.54
சித்தம்.

**மேடம்**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், பொருள் விரயம், மனக் கவலை.

**இடபம்**
உடல் நலம், கௌரவம், அமைதியான நிலை, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், சயனசுகக்குறைவு, தனவிரயம்.

**கடகம்**
செல்வாக்கு, பொருள் சேர்க்கை, காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி;

**சிங்கம்**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், பெரியோர்மதிப்பு, பணியாளர் உதவி;

**கன்னி**
கட்டுப்பாடு, பிரயாணம், மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், முயற்சி தடங்கல், உறவினர்வெறுப்பு;

**விருச்சிகம்**
சுவாரஸ்யம், திடீர் பயணம், காரியவெற்றி, விருந்து.

**தனுசு**
சத்துரு ஜெயம், வியாதி குணமடைதல், தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி;

**மகரம்**
குடும்பக் கவலை, வியாதி, தாழ்வு நிலை, காரியம் தாமதம்.

**கும்பம்**
உடல் சோர்வு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், கல்விச் சிறப்பு.

**மீனம்**
இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, தனவரவு, பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

---

சமய வகுப்புக்கு சென்ற சமயம்

# மாணவி மீது பிக்கு பாலியல் வல்லுறவு

(கொழும்பு)

பௌத்த விகாரையொன்றில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் சமய வகுப்புக்குச் சென்ற மாணவி மீது பிக்கு ஒருவர் பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளார்.

இது குறித்து மீரிஹ ம பொலிஸ் நிலையத்தில், நுகேகொட பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மாணவியின் தாய் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய மாணவி வயதானவர் எனவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்ப தாகவும் தெரியவந்துள்ளது.(உ)

# சட்ட விரோத குழாய்நீர் பெறுவோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதிகளில் சட்ட விரோதமாக குழாய் நீரைப் பெற்றுக் கொள்பவர்கள், மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆரம்பித்துள்ளது.

கட்டணம் செலுத்தாது இணைப்புத் துண்டிக்கப்பட்ட பின்னர் மீண்டும் சட்ட விரோதமாக இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள் மீதே சபை சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றின் இணை அலுவலகம் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும்,

கடந்த இரண்டு வருடங்களில் கொழும்பு நகரப் பகுதியில் சட்டவிரோதமாக குழாய் நீரைப் பெற்றுக் கொண்ட சுமார் இருநூறு வீட்டுரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப் பட்டதாகவும் அச்சபை மேலும் தெரிவித்துள்ளது. [செ]

# விபத்தில் காயம்

(மந்திகை)

வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் மோதியதால் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வீரபத்திர கோவிலடியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி சந்திரகாசன் (வயது-21) என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

# மாதாந்த உதவிப் பணம்

(மந்திகை)

பளை பிரதேச செயலர்பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கானயூன்மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேச, செயலர் பிரிவில் புற்றுநோய், காசநோய் என்பவற்றிற்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் அந்தந்த தபால், உப தபால் நிலையங்களில்வைத்து விநியோகிக்கப்படுகின்றன. (உ-23)

# நவாலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதியில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் அவ்வூர் இளைஞர்களும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணியினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தவகையில், அண்மையில் கொத்துக்கட்டி வயல் பகுதியில் மீசாலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வரும் ஒருவரது வீட்டில் இருந்து பெருமளவு கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் கோடா கைப்பற்றப்பட்டதுடன், சம்பந்தப்பட்டவர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-9)

# பேருந்து சேவை நேரம் நீடிப்பு

(கல்வயல்)

யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு மணி நேரம் தளர்த்தப்பட்டதையடுத்து வட பிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்து சேவைகளின் நேரத்தை நீடித்துள்ளது.

முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து மாலை 6 மணிக்குப் புறப்பட்ட இறுதிப் பேருந்து சேவை 6 30 மணிக்கும்,

பருத்தித்துறையிலிருந்து மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் புறப்பட்ட இறுதிப் பேருந்து சேவை 5.30 மணிக்கும் தற்போது இடம்பெறுகிறது. (உ-111)

# வீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட ஒழுங்கையும் திருநெல்வேலி தாளையடி ஒழுங்கையும் நல்லூர் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது,

அதேவேளை, திருநெல்வேலி ஆடியபாதம் வீதிஅகலமாக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றது. (உ-104)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல-22

## ஆக்கம் எஸ். எஸ். பவான்

★ கீழ் காட்டப்பட்ட இலக்க, எழுத்து சக்கரங்களைக் கொண்டு கீழே தரப்பட்ட எழுத்தைக் குறிக்கும் இலக்கத்தைப்பெட்டிக்குள் எழுதுக.

| இலக்க சக்கரம் | | | | எழுத்துச் சக்கரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 5 | 4 | அ | தி | ச | தி |
| 5 | 4 | 3 | 5 | ச | தி | அ | ச |
| 4 | 5 | 4 | 3 | தி | ச | அ | ச |

01) 4 இலக்கம் குறிக்கும் எழுத்து. ☐
02) 5 இலக்கம் குறிக்கும் எழுத்து. ☐
03) 3 இலக்கம் குறிக்கும் எழுத்து. ☐

★ பின்வருவம் வினாவிற்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

04) மரண மடைந்தவர் வீட்டில் காணப்படுவது
[கவலை. இனிமை, வீரம்]
05) உழைப்பாளியிடம் காணப்படுவது
[காசு, வியர்வை, கவலை]
06) ஏழையின் வீட்டில் கூடுதலாகக் காணப்படுவது
[உணவு, காசு, வறுமை]
07) சண்டை செய்பவனிடம் காணக்கூடியது
[பயம், பக்தி, வீரம்]
08) திருவிழாவில் காணக் கூடியது
[சனக்கூட்டம், சுவாமி; ஐஸ்பழம்]
09) மீன்பிடித் துறையில் காணக்கூடியது
[மீன், வள்ளம், கடல்]

★ பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

10) பஸ் நிலையம ஒன்றில 14 பஸ்கள வரிசைக்கு அடுக்கப் பட்டன. ஒரு பஸ்ஸின் நீளம் 5 மீற்றர் ஆகும். இரு பஸ்களுக்கிடையில் 2 மீற்றர் இடைவெளி காணப்பட்டால் பஸ் நிலையத்தின் நீளம் என்ன?
11) வல்லவன் 10 மாட்டை வைத்திருந்தான். அவன் ஒரு மாட்டை கொண்டு சென்று மேயக் கட்டுவதற்கு 22 நிமிடம் எடுத்தால் 10 மாட்டையும் கட்ட எடுக்கும் நேரம் என்ன?
12) பாலன், சீலன், சாலன் வீதியால் வந்துகொண்டு இருந்தார்கள் அப்போது மழை பெய்தது இங்கே யார் குடையைப் பிடித்தால் மூவரும் நனைய மாட்டார்கள்?
13) அபிராமி கணிதத்தில் கெட்டிக்காரி ஆனால் சோபிகாவைவிட கெட்டிக் காரியல்ல; ஆனால் அபிராமியிலும் பார்க்க அனுத்திரிகா கெட்டிக்காரி எனின் இங்கே அதி கெட்டிக்காரி யார்?
14) பரமன் பால்வாங்கி விற்கும் வியாபாரி. இவன் ஒரு லீற்றருக்கு 250 ML நீர் கலந்து விற்பனை செய்கிறான். ஒருவருக்கு 5L பால கொடுக்க எத்தனை L பால் வேண்டும்?

★ பின்வரும் வினாவிற்கு கீழ் தரப்பட்ட சரியான விடையைத் தெரிந்து எழுதுக.

15) பழவகை இனிக்கும். ஆனால் மிளகாய்ப்பழம்
[கசக்கும், உறைக்கும், இனிக்கும்]
16) முட்டை இடுவன பறவையாகும் ஆனால் ஆமை
[பிராணி, குட்டி, பிள்ளை]

★ பின்வரும் வடயங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.

17) கடிதம் ஒன்றைப போடுவதற்கு கசேரிக்குச் செல்ல வேண்டும் ☐
18) நரி ஒரு அனைத்தும் உண்ணியாகும் ☐
19) உதைபந்தாட்ட விளையாட்டில் ஒரு பக்கம் 11 பேர் ஆடுவார்கள் ☐
20) ஒன்று தொடக்கம் ஐந்து வயது வரை குழந்தைப்பருவமாகும் ☐

★ பின்வருவனவற்றை கருத்திற் கொண்டு கீழ் வருவனவற்றுக்கு விடை தருக (இலக்கத்தில்)

```
 A Z B   R M A
   Z B     Z T
 ------  -----
 2 4 6   5 8 3
 ------  -----
```

21] A + Z + B = ☐ 22] Z + T + A = ☐
23] B + A + T = ☐ 24] B + R + M = ☐

★ பின்வரும் பந்தியை அவதானிந்து விடை தருக.

தேநீர் விருந்தொன்றில் 40 பேர் லட்டையும், 10 பேர் பற்றீசையும் 20 பேர் முறுக்கையும் 60 பேர் லட்டு, முறுக்கு இரண்டையும் 50 பேர் லட்டு, பற்றீஸ் இரண்டையும் விரும்பினார்கள்;

25] எத்தனை பேர் லட்டுகள் உண்பார்கள் ————
26] லட்டு மட்டும் உண்பவர் எத்தனை பேர் ————
27] எத்தனை பேர் பற்றீஸ் உண்பார்கள் ————
28] முறுக்கு உண்பவர் எத்தனை பேர் ————
29] சராசரி உணவுப் பொருள் 2 ரூபாவாயின் ஏற்படும் செலவு என்ன ————

★ விடை தருக.

30] இலங்கையில உள்ள இயற்கை வனத்தின் பெயர் என்ன?
31] இலங்கையில் மழை குறைந்த மாவட்டம் யாது?
32] இயற்கை அல்லாத துறைமுகம் அமைந்த இடம்?
33] இலங்கை தொலைக் காட்சி நிலையத்தின் பெயர் என்ன?
34] இ. போ. ச என்ற குறியீடு காட்டுவது?

★ பின்வரும் விடயத்தைக் கொண்டு விடைகளைத் தருக.

12 மீற்றர் நீளமும 10 மீற்றர் அகலமும் கொண்ட ஓர் காணியைத் துவாரகன் வீட்டுத் தோட்டம் செய்ய தரிவு செய்தான்.

35] இக் காணிக்கு 2 மீற்றர் இடைவெளி விட்டு கதியால் போடத் தேவைப்படும் கதியால்கள் எத்தனை?
36] இக் காணியின் சுற்றளவு எத்தனை மீற்றர்?
37] ஒரு கதியால் போட 10 நிமிடங்கள் தேவைப்படின் முழுக் கதியால் போட எடுக்கும் நேரம்?
38] ஒரு கதியால் 8 ரூபா 50 சதமாயின் எவ்வளவு பணம் வேண்டும்?
39] கதியால் ஒன்றின் நீளம் 2 மீற்றர் 50 சென்ரி மீற்றர் ஆயின் முழுக் கதியால் நீளமும் எவ்வளவு?
40] ஒரு கதியாலுக்கு 3 லீற்றர் நீர் தேவைப்படின் முழுக் கதியாலுக்கு எத்தனை லீற்றர் நீர் வேண்டும்?

**குறிப்பு :-**

விடைகளை வேறுதாளில் எழுதிஅனுப்பவும். இதற்கான விடைகளை 25-06-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**கல்விப் பகுதி**
**வினா இல- 22**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ....................
சொந்த முகவரி: ....................
கற்கும் பாடசாலை : ....................
மாணவர் கையொப்பம் : ....................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை
## வினா இல - 21

**அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

01) ச.. மேனன், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
02) ஞா. யோகனா, வட்டு. இந்துக் கல்லூரி
03) ப. அனில்ரன்ராஜ். யாழ் மத்திய கல்லூரி
04) சு பிரமிலா, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்
05) யோ. சிந்துஷா, வட்டு, யாழ்ப்பாணக் கல்லூரி
06) ஞா. அன்ரனி தர்ஷிக், மயிலிட்டி றோ. க. வித்தியாலயம்
07) தி. தனம் ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
08) அ. இளங்கோவன். நெ. மெ. மி. த.க. பாடசாலை
09) எஸ். ஜேம்ஸ் ஜான்சன், யாழ் மத்திய கல்லூரி
10) ப. அஜந்தன், யாழ். மத்திய கல்லூரி
11) கா. கஜன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
12) மு. ஆரபி, யாழ இந்து ஆரம்ப பாடசாலை
13) நி. டிஜானி, கொக்குவில் சி. சி த. க. பாடசாலை
14) கு. ஜனனி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
15) பெ. கலைவாணி, வல்வை. ம ம. வித்தியாலயம்
16) ப. கோபிகா. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
17) வி. கோகுலன். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
18) நா. ஜெனோசன். யாழ். மத்திய கல்லூரி
19) சி துவாகரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
20) க. சஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
21) பு. கயனா, வல்வை அ மி த. க. பாடசாலை
22) ச. கோபிகன், யாழ். மத்திய கல்லூரி
23) லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
24) செ. செல்வறஜீபன், புற்றளை மகா வித்தியாலயம்
25) சி. நிரோஜினி, வல்வை ம. ம. வித்தியாலயம்
26) சி தர்சிகா, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
27) இ. ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
28) ந. சாளினி, துன்னாலை ஞானசாரியார் கல்லூரி
29) க. சோபிகா, அல்லாரை அ. த க. பாடசாலை
30) பி. ருசாந், யாழ். மத்திய கல்லூரி
31) செ. அபர்ணா, கரணவாய் மகா வித்தியாலயம்
32) அ அஜந்தன் பெனா , யாழ் மத்திய கல்லூரி
33) வி. கப்ஷன். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாட
34) ச மதுஷ்னன், யாழ்: மத்திய கல்லூரி
35) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
36) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
37) வா. பிரணவன், வல்வை. அ. மி. த.க. பாடசாலை
38) பி. பிரதீபா, வல்வை சிவகுரு வித்தியாசாலை
39) வெ. ஜெயப்பிரசாந், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
40) கு. சிந்துஜா, வல்வை. ம. ம. வித்தியாலயம்
41) கு கேசவன், யாழ். மத்திய கல்லூரி
42) ஸ்ரீ. அபிராமி, சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை
43) நா: அனோஜினி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
44) அ. நிருபன், துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
45) யோ. எங்கெல்ஸ், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
46) ப. தாமரா, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
47) பா. சாயிஷங்கர். வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
48) ஞா. தேன்மொழி. வல்வை. ம. ம வித்தியாலயம்
49) வி. ஜெயதீபா. நயினாதீவு நாக பூசணி வித்தியாலயம்

(நாளை தொடரும்)

# புலமைப் பரிசில் பரீட்சை
## வினா -21
## விடைகள்

01) திடீரென ஏற்பட்ட வயிற்று வலி
02) சீருடையை அழுத்தி ஆயத்தப் படுத்தலில் ஏற்பட்ட தாமதம்
03) தங்கையுடன் ஏற்பட்ட முரண்பாடு
04) ஒளிராப் பொருள்
05) இலை, குழை, சருகு, குப்பை, மாட்டுச் சாணம் ஆகியவற்றை மண்ணுள் புதைத்தல்
06) தவளை
07) அட்டை
08) மஞ்சள்
09) மேற் கூறிய மூன்று
10) இணை மொழி
11) உடனுக்குடன்
12) மாலை 4 மணி
13) முத்திரை
14) 0.1
15) 75
16) ஏட்டுச்சுரைக்காய்கறிக்குதவாது
17) உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
18) இக்கரை மாட்டுக்கு அக்கரைபச்சை
19) வாரம்
20) மாலை
21) புதன்
22) வாழைப்பழம்
23) வண்ணத்துப்பூச்சி
24) துவிச்சக்கர வண்டி
25) வியாழக்கிழமை
26) கடல்கொண்டுபோகும்
27) பயம் ஒன்று காணும்
28) உன்னைப் பாடசாலைக்கு
29) போலஏனங்கு நின்றாய்
30) கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்
31) கடிதம்
32) வெளிநாடு
33) உன்
34) நிறைவடைய வில்லை
35) A
36) பாடத்தில் பின்னடைவானமாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது
37) கண்ணீர்
38) நான்முகி
39) சிவனொளிபாதமலை
40) நீலோற்பலம்

## திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் 24 ஆம் இலக்க விடுதியின் அவசர சிகிச்சைப் பிரிவில் திருத்தவேலைகள் நடைபெற்று வருகின்றது. (உ-104)

## இன்று கண்காட்சி

[மந்திகை]

புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் புதுயுகத்திற்கு வழி காட்டல் மாணவர் ஆக்கக் கண்காட்சி இன்று மு ப 10 00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்சி. சிவராசா பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார். [உ-23]

## ஒருவர் மரணம்

(கொழும்பு)

நேற்றைய தினம் மன்னாரில் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த வடு தலைப்புலிகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஒருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது துப்பாக்கிகளும் வானொலிக் கருவிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# நன்றி செலுத்துவது யார்?

ஜப்பான் நாட்டில் எங்சரு என்பவர் சிறந்த ஆசிரியராக விளங்கினார். அவரிடம் கல்வி கற்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். வந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் அவர்கள் தங்குவதற்காகப் பள்ளி ஒன்றைக் கட்ட எண்ணம் கொண்டார் அவர். அதற்காக நிதி திரட்டத் தொடங்கினார்.

இதை அறிந்த வணிகன் ஒருவன், ''நாம் பெருந் தொகை ஒன்றை அவரிடம் தருவோம். அதைக்கொண்டு அவர் பள்ளியைப் பெரிதாகவே கட்டலாம்'' என்று நினைத்தான். தன்னிடமிருந்த ஐந்நூறு பொற்காசுகளை அவரிடம் முன்வைத்தான் அவன். ''நான் இந்தத் தொகையை எடுத்துக்கொள்கிறேன்'' என்று சொன்னார் அவர். தன் செயலுக்காக ஆசிரியர் பெருமளவில் நன்றி சொல்லித் தன்னைப் பாராட்டுவார் என்று எதிர்பார்த்த வணிகன் ஏமாற்றம் அடைந்தான்.

ஆசிரியரைப் பார்த்து, ஐயா! இதில் ஐந்நூறு பொற்காசுகள் உள்ளன. நம் நாட்டில் ஒருவன் ஆயுள் முழுவதும் உழைத்தாலும் பத்துப் பொற்காசுகள் சேமிக்க முடியாது. நான் பெரிய வணிகன் தான். ஆனாலும் இந்த ஐந்நூறு பொற்காசுகள் மிகப் பெரிய தொகைதான் என்று இழுத்தான். ''அதற்கு நான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும் அதைத்தானே எதிர்பார்க்கிறாய்?'' என்று வெளிப்படையாவே கேட்டார் ஆசிரியர்.

''நான் செய்த இந்தச் செயலுக்குத் தாங்கள் நன்றி செலுத்தியே ஆகவேண்டும்'' என்றான் அவன். உடனே அவர், ''நான் எதற்காக உனக்கு நன்றி செலுத்த வேண்டும். இவ்வளவு நல்ல செயலுக்கு உதவி செய்ய உனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக நீ அல்லவா எனக்கு நன்றி சொல்லவேண்டும்?'' என்றார். இதைக் கேட்ட அவன் வாயடைத்து நின்றான்.

பேராசிரியர் எ. சோதி

## கண்ணி வெடிகள் அகற்றும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பழைய பிரதமதபால் கந்தோர் அமைந்துள்ளகாணியில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

யாழ்ப்பாணம் கோட்டைக்குமுன்பாக அமைந்துள்ள பிரதம தபாற்கந்தோர்க்கட்டடம் யாழ்கோட்டை இராணுவமுகாம்தகர்ப்பின்போது சேதமடைந்த நிலையில் வெறும் சுவர்களுடனேயே காணப்படுகிறது.

இடிந்தநிலையில் காணப்படும் பிரதம தபாற் சந்தோரை மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்குமுன்னோடியாகவே மிதிவெடிகள் அகற்றும்பணி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மிதிவெடிகள் அகற்றும் பணியையாழ் பிரதம தபால் அதிபர்எஸ் மார்க்கண்டேயன் நேரில்சென்று அவதானித்தார். (வ)

## சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுவது நோர்வேயின் கைகளில்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைதொடர்பானசமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் இனிவருங்காலத்தில் நோர்வேயின் அணுகுமுறையிலேயே தங்கியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக நோர்வே எத்தகையகருத்தை தெரிவிக்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுதெரியவருமென லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## பாலியல் விவகாரம் தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பாலியல்சித்திரவதைக் குள்ளாக்கப்பட்ட இருபெண்களின் சித்திரவதை தொடர்பானஅறிக்கைதொல்லை தவிர்ப்புக் குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்படவில்லைஎனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸார் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மாறாக இருபெண்களும்தாம் பாலியல்ரீதியில்சித்திரவதைக் குள்ளாகவில்லையெனக்கூறிய ஒலிப்பதிவுநாடா வொன்றை தொல்லைதவிர்ப்புக்குழுமுன்னிலையில் போட்டுக் காட்டினர்.

அந்த ஒலிப்பதிவுநாடாவில் தாம்எந்த விதமான பாலியல் சித்திரவதைக்குப் உள்ளாக்கப்படவில்லையென்பதைபயந்து நடுங்கியகுரலில் இரு பெண்களும் தெரிவித்தனர்.

ஒலிப்பதிவு நாடாவைசெவிமடுத்த தொல்லை தவிர்ப்புக் குழு உறுப்பினரும் 'பிரதிஅமைச்சருமான பொன் கணேசமூர்த்தி இருபெண்களும் பயந்தவண்ணம் இதனைத் தெரிவித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகவும், இதனால் இதனை நம்ப முடியாதெனவும் கூறினார்.

இதனையடுத்துஇச்சம்பவம் தொடர்பான சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெற்று அடுத்த வாரம் சமர்ப்பிக்கும்படிபம்பலப்பிட்டிப் பொலிஸாரைத் தொல்லைதவிர்ப்புக் குழு பணித்துள்ளது. (வ)

# கிராமியத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக்கருத்தரங்கு

## பருத்தித்துறையில் 5 தினங்கள்

(புலோலி)

பருத்தித்துறைப் பிரதேச கிராமியத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கொன்று இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ சிவசுவாமி தலைமையில் வடமராட்சி போரூட் நல்லொழுக்க நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

வலிவடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதில் பங்கு பற்றுவதற்கென கிராமியத் தலைவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இக் கருத்தரங்கின் இணைப்பாளராகப் பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜா பணியாற்றுகிறார்.

இப் பயிற்சிகளைப் பெற்ற கிராமியத் தலைவர்களுக்குப் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-52)

## முன்மாதிரியாக செயற்படும் பொது நூலகம்

(கல்வயல்)

வலிகமாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் மருதனார்மடம் பொதுசன நூலகம் மிகவும் முன்மாதிரியாக இயங்குவதாக வாசகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டுக்கு வர்த்தமானி வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுகின்ற போதிலும், அதனைஉரியநேரத்தில் இங்கு வருவித்து வேலைவாய்ப்பு தொடர்பான விண்ணப்பங்களைவிண்ணப்பதாரிகள் நேரகாலத்துடன்அனுப்புவதற்கு வழிவகைகள் செய்து வருகின்றனர். (உ-111)

## வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட உரும்பிராயைச்சேர்ந்த சின்னத்தம்பி தயாபரன் மீதான வழக்கு விசாரணை நேற்று யாழ் மேல் நீதிமன்றில் நீதவான் கே. பி. எஸ். வரதராஜா முன்னிலையில் நடைபெற்றது.

பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பிரஸ்தாபநபர் தொடர்பான வழக்கு விசாரணைகளை ஜுலை மாதம் 10ஆம் திகதிக்கு நீதவான் ஒத்தி வைத்துள்ளார். (இ- 06,

## இளைஞன் பலாலியில்

(யாழ்ப்பாணம்)

கடந்த 3 ஆம் திகதிகப்புதூ பகுதியில்படையினரால்கைது செய்யப்பட்ட வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த கு. சுதாகரன் (வயது 19) என்றஇளைஞன் பலாலி இராணுவமுகாமில் உள்ளதாக52வதுபடைப் பிரிவினர் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அறிவித்துள்ளனர். (உ-10)

## கொழும்பில் சுற்றிவளைப்பு 17பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை, வாழைத் தோட்டப் பகுதிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவுமுதல் மறுநாட் காலை வரை பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

இத் தேடுதல் வேட்டையின் போது 17 தமிழ்இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 17 இளைஞர்களும் வடக்குக் கிழக்கு மாகாணங்களைசேர்ந்தவர்கள் என்றும் இத் தேடுதலின் போது 100க்குமேற்பட்ட பொலிசார் ஈடுபட்டனர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 25 ஆம் திகதி முதல் மீசாலை வீரசிங்கம் ம.வி. மீண்டும் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

மீசாலைப் பகுதியில் மீளக் குடியேறிய மக்களின் பிள்ளைகளின் நன்மை கருதி யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் எதிர்வரும்25 ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் ஆரம்பக் கட்டமாக முதலாம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையான மாணவ மாணவிகளுக்கும் கல்விகற்பிக்கப்படும்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், மீசாலை மேற்கில் விக்னேஸ்வராக் கல்லூரி, சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் முன்பு கல்வி பயின்ற மாணவ மாணவிகளுக்கும் இப் பாடசாலையில் கல்வி கற்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப் படவுள்ளன.

மேலும் இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் போக்கு வரத்து வசதி கருதி, கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் பேருந்து சேவை காலை 7.00 மணிக்கு கொடிகாமத்திலிருந்து ஆரம்பிக்கப்படுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (உ)

## உலக அகதிகள் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

உலக அகதிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐ.நா. தீர்மானத்திற்கமைய இத் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் 22 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தற்கொலை

(கொழும்பு)

குடும்பத் தலைவியின் மேசமான நடவடிக்கையை பொறுக்கமாட்டாத ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் நஞ்சருந்தித்தற்கொலைசெய்துள்ளனர்.

களுத்துறைப் பகுதியில் ஒரு குடும்பத் தலைவனும் அவருடைய இரு பெண்பிள்ளைகளுமே இவ்வாறு தற்கொலை புரிந்துள்ளனர்.

வெளிநாடொன்றில் வேலை புரிந்துவரும் தாயின் நடத்தையைப் பொறுக்கமாட்டாது தாம் தற்கொலை செய்வதாக ஒரு கடிதத்தினை அவர்கள் எழுதி வைத்துள்ளனர். (உ)

## போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை ஒட்டி மாணவரிடையே போட்டி

(மந்திகை)

போரூட் நிறுவனத்தினால் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் மத்தியில், போதைப் பொருள் எதிர்ப்புத் தினத்தை ஒட்டி போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கட்டுரை, பேச்சு, பொது அறிவு சுவரொட்டிச் சித்திரம் ஆகியன இடம் பெறும். [உ-23]

## வடமராட்சிக் கடலில் கைதான மீனவர்கள் ஆட்பிணையில் விடுவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 மீனவர்களையும் காங்கேசன் துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் திங்கட்கிழமை ஆஜர் செய்தபோது, அவர்களைத் தலா 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதவான் இ. ஏகநாதன் தீர்ப்பளித்தார். (உ-43)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ **பெற்றோர் அற்ற பிள்ளைகள்**

ஒவ்வொரு வருடமும் சுமார் 10 இலட்சம் அமெரிக்கக் குழந்தைகள் தங்களது பெற்றோர் விவாகரத்துப் பெற்று பிரிந்து செல்லும் அவல நிலையைச் சகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். என ஆய்வொன்று சுட்டிக் காட்டுகின்றது.

★ **புத்திசாலிப்பிள்ளைஎப்போதுபிறக்கும்?**

தம்பதியினருக்கு புத்திசாலியான பிள்ளைகள் எப்போது பிறக்கிறார்கள் என்பது பற்றி ஆராய்ச்சி நடத்திய ரஷ்ய விஞ்ஞானிகள் வெளியிட்ட தகவலை அடுத்து 38 வயது அப்பாக்களுக்கும் 27 வயது அம்மாக்களுக்கும் மவுசு அதிகரித்துள்ளது.

விஞ்ஞானிகளின் கருத்துப் படி தந்தைக்கு 38 வயதாகும் போதும் தாய்க்கு 27 வயதாகும் போதும் பிறக்கின்ற பிள்ளைகளே மகா திறமைசாலிகளாக விளங்குகிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

-அவதானி-

## மணிப்பூரில் தொடரும் ஆர்ப்பாட்டம் நிலைமையைக் கட்டுப்படுத்த பெருமளவு இராணுவத்தினர்விரைவு

(மணிப்பூர்)

மணிப்பூரில்தொடரும்ஆர்ப்பாட்டங்கள் கட்டுக்கடங்காது எல்லை மீறிப் போனதால் அப்பகுதியில் நேற்று முன்தினம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் உடனடியாக மேலதிக இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் தொடரும் நிலையில் மணிப்பூரில் உள்ள அரசியல்கட்சி அலுவலகங்கள், மற்றும் அரச கட்டடங்கள் என்பன நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முதலமைச்சரின்வாசஸ்தலத்தைத்தாக்க முயன்ற ஆர்ப்பாட்டக் கும்பலை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் 11பேர் உயிரிழந்ததுடன்20பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களில் பலரை இராணுவமும்மற்றும்பொலிஸாரும் கைதுசெய்துள்ளதாகவும் கண்ணீர்ப்புகை மற்றும் தடியடி காரணமாக காயமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தியசாலைகளிற்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

## உலக தரிசனம்

## றுவாண்டா நீதிமன்றத்தால் 9 பேருக்கு மரணதண்டனை

(புஜும்புரா)

றுவாண்டாவில் பாரிய குற்றவாளிகளாக இனம் காணப்பட்ட 9பேருக்கு மரண தண்டனை வழங்க அந்நாட்டு உயர்நீதி மன்றம் முடிவு செய்துள்ளது.

றுவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய மனிதப் படுகொலைகள் பற்றிய விசாரணை நடாத்தி வந்த மேற்படி நீதிமன்றம் தற்போது குற்றவாளிகளாக இனம் காணப்பட்ட 9 பேருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழங்கியது.

மேற்படி படுகொலைச்சம்பவத்தின்போது சுமார்8 இலட்சம் சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்களால் வெட்டியும் இரும்புக் கம்பிகளால் அடித்தும் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## ரஷ்ய அதிபர் புட்டின் கொசோவோ விஜயம்

(மொஸ்கோ)

ரஷ்யா அதிபர்விளாடிமீர் புட்டின் கொசோவோவிற்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அமைதி காக்கும் படையினரைப் பார்வையிடவும், ஐ. நா. நிர்வாக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுமே அவர் கொசோவோவிற்குச் சென்றுள்ளார்

கொசோவோவில் உள்ள அல்பேனிய பயங்கரவாதிகளிடம் உள்ள ஆயுதங்களைக் களைய அனைத்துலக நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென ரஷ்ய அதிபரால் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது;

இதே வேளை, கொசோவோவில் உள்ள ஐ. நா. நிர்வாகிகள் தவறுகளைச் செய்துள்ளனர் என கூறியுள்ள புட்டின் அவர்கள் அனைத்துலகத்தின் அனைத்துப் பிரிவினைச் சேர்ந்த மக்களையும் பாதுகாக்கத்தவறிவிட்டார்கள் என குற்றம் சாட்டியுள்ளார். (உ-9)

## சதாம் ஹூசைனை அழித்தொழிக்க நிதியை வாரிவழங்கும் அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் ஆட்சிக்கு எதிராகச் செயற்படுவோருக்கு அன்பளிப்புக்கள் வழங்கி அவர்களை ஊக்குவிக்க அமெரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது என செய்திஒன்று வெளியாகியுள்ளது.

சதாம்ஹூசைனிற்கு எதிராகவும் அவரது ஆட்சிக்கு எதிராகவும் செயற்படும் அமைப்புகளிற்கு அமெரிக்க அரசு 60 லட்சம் டொலர்களை வழங்கியுள்ளதுடன்.

சதாமிற்கு எதிராக செயற்படும் ஏனைய அமைப்புகளிற்கும் இவ்வாறான உதவிகள் வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது; ஈராக்ஜனாதிபதி சதாம் ஹூசைனிற்கு எதிராகப் போராடிவரும் குர்திஷ், சன்னி இன முஸ்லிம் அமைப்புக்களிற்கே 60 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த அமைப்புகளிற்கு 43 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டமை தெரிந்ததே.

இவ்வாறான சதாமின் எதிரிகளுக்கு வழங்குவதற்கென்றே அமெரிக்காவின்இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒருகோடியே 80 லட்சம் டொலர் ஒதுக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சிறைகளில் வசதிகோரி கைதிகள் உண்ணாவிரதம் இதுவரை 24 பேர் உயிரிழப்பு

(அங்கரா)

துருக்கியில் சிறைக்கைதிகள் மேற்கொண்டு வரும் உண்ணா விரதத்தின் காரணமாக சிறைக்கைதி ஒருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறைச் சாலையில் உயிரிழந்தார்.

அவர் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்து 240 ஆவது நாள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இத்துடன் உயிரிழந்த உண்ணா விரதக் கைதிகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது

இனிப்புடன் கூடிய உப்பு நீரையும் விற்றமின்களையும் உண்டு வரும் குறித்த உண்ணாவிரதக் கைதிகளில் பலர் கடும் நோய்களுக்குட்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில்புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறைக் கூடங்களில் வசதிகள் போதாது எனவும், சிறைக்காவலர்களின் அடாவடித் தனத்தை எதிர்த்தும் நூற்றுக் கணக்கான சிறைக்கைதிகளும் அவர்களின் உறவினர்களில் சிலரும் மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (உ-9)

## வாஜ்பாயின் துணிச்சலை கடாபி பாராட்டினார்

(புதுடில்லி)

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரபபை மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இல்லாமல் பேச்சுக்கழைத்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் துணிவை தான் பாராட்டுவதாக லிபிய ஜனாதிபதி கடாபி கூறியுள்ளார்.

முஷரப்பை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பேச்சுக்கழைத்திருப்பது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது என கடாபி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய-பாகிஸ்தான் தரப்பினர் நேருக்குநேர் சந்தித்துப் பேசுவதால் பல நல்ல முடிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள லிபிய நாட்டின் தூதர் அபுசெத் எமர் தோர்டா கூறியுள்ளார். (உ-9)

## ஈரானில் உள்ள இந்தியத் தூதரகத்தில் குண்டு வெடிப்பு

(தெஹ்ரான்)

ஈரானில் பாகிஸ்தான் எல்லையை அடுத்துள்ள ஹகிதான் மாகாணத்தில் உள்ள இந்திய தூதரகக்கட்டடத்தில் கடந்த வியாழக்கிழமை குண்டொன்று வெடித்துள்ளது.

இக் குண்டு வெடிப்பினால் கட்டடம் பலத்தசேதத்திற்குள்ளாகிய போதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

குண்டுவெடிப்புத் தொடர்பாகஈரானிய அரசுபுலன்விசாரணை மேற்கொண்டு வருகிறது. (உ-3)

## இந்தோனேஷியாவில் சாரதிகள் வேலைநிறுத்தம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் எரிபொருள் விலை கடந்த வாரம் முதல் 30 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டதனையடுத்து அங்குள்ள பேருந்து சாரதிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சாரதிகளின் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பயணிகள் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கியுள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த பல நூற்றுக் கணக்கான மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்திலஈடுபட்டுள்ளனர் (உ-9)

## ஒஸாமா பின்லேடனின் ஆதரவாளர்கள் இந்தியாவில் கைது

(புதுடில்லி)

இந்தியா, மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைநகர்களில் உள்ள அமெரிக்க தூதரகங்களின்மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட சதிக்குப்பலைச் சேர்ந்த மேலும் ஒருவரை கடந்த ஞாயிறு இந்தியாவில் வைத்து கைது செய்துள்ளதாக இந்தியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இம் மூவர் மீது நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து இவர்கள் சர்வதேச பயங்கரவாதி ஒஸாமாபின்லேடனுடன் தொடர்புடையவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஒஸாமாபின்லேடன் 1998 ஆம்ஆண்டில் கென்யா, மற்றும் தன்சானியாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களின் மீது தாக்குதல் நடத்தி தற்போது அமெரிக்காவால் தேடப்பட்டு வருபவர்என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தாய்லாந்து தலைநகரில் குண்டுகள் மீட்பு

(பாங்கொக்)

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் உள்ள வியட்நாம் தூதரகத்தின்முன் வைக்கப்பட்டிருந்த இரண்டு குண்டுகளை பொலிஸார் செயல் இழக்கச் செய்துள்ளனர்.

நேற்றுக் காலை இக்குண்டுகளை வைத்தவர் ரக்ஸிவாகனம் ஒன்றில் ஏறித்தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தக் குண்டுகளை செலுலர் தொலைபேசி மூலம் வெடிக்கச்செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வியட்நாம் தூதரகத்திற்கு அருகே அமெரிக்கத் தூதரகம், மற்றும் அமெரிக்கத் தூதுவர் இல்லம் ஆகியன அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தபால்பெட்டி சேதம்

(கல்வயல்)

பருத்தித்துறை பிரதான வீதியும் தமபசிட்டி வீதியும் இணையும் முதலாம் கட்டைச் சந்தியில் சிமெந்தினால் அமைக்கப்பட்டிருந்த தபாற்பெட்டியை விஷமிகள் இடித்து வீழ்த்தியுள்ளனர்.

இதனால் மேற்படி பகுதி மக்கள், தமது தபால்களை இடுவதற்கு தபால்பெட்டியை நாடி அலைந்துதிரிகின்றனர். (உ-111)

காதல காதல் அறயாமை
உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்

குறள்

## வலம்புரி

### ஜென்மத்து வியாழன்

வியாழனைப் போல் கொடுப்பாருமில்லை, கெடுப்பாரும் இல்லைஎன்பது சோதிட வாக்கு அண்மையில் வியாழமாற்றம் இடம்பெற்றது. இவ் வியாழமாற்றம் நல்லதோ கெட்டதோ என்பதுபற்றி கூறமுடியா விட்டாலும் ஆட்சியில் இருக்கும்பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு எவ்வகையிலும் நல்லதல்ல என்பதை மட்டும் ஆணித்தரமாக கூறிவிடலாம்.

இப்போது வியாழ மாற்றம் அரசுக்கு ஐக்கியதேசி கட்சியின் வடிவத்தில் வந்து அலுவல் செய்யத் தொடங்கி விட்டது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை, அமைச்சர் மஹிபால ஹேரத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை, இவை எல்லாவற்றையும் விட ஒட்டுமொத்தத்தில் அரசுக் கெதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை இந்நிலையில் அரசு தப்பிப் பிழைக்குமா என்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்துள்ளது.

துரியோதனனுக்கு வியாழன் ஜென்மத்தில் இருந்த போதே அவனது தலை வீழ்ந்ததாகக் கூறுவர்.

இப்போது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஜென்மத்துவியாழன் போல் தெரிகிறது. துரியோதனனின் தலையையே கொண்டுபோன ஜென்மத்துவியாழன்பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை விட்டுவைக்குமா என்பது கேள்விக்குறி ஆயினும் வியாழபகவானுக்குசாந்தி செய்து பரிகாரம் தேடினால் ஆட்சியைக் காப்பாற்ற முடியும்.

இப்போது இருக்கும் நிலையில் வியாழ பகவானைசாந்தப்படுத்தக்கூடிய ஒரே ஒரு பரிகாரம் விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு நீக்குவதே யாகும். அவ்வாறு புலிகள் மீதானதடையை அரசு நீக்கினால் வியாழ சுகம். ஏனைய தமிழ்க் கட்சிகளினூடாக அரசுக்குக் கிடைக்கும். அதன்மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி, தப்பித்துக்கொள்ளும் இல்லையேல் ஜென்மத்து வியாழன் தனது வேலையைக் காட்டியேதீருவான்.

அதன்பின்பு சமாதானப் பேச்சு, யுத்த நிறுத்தம். என்றெல்லாம்கூட்டத்தில் கூடிநின்றுகூவிப் பிதற்றினாலும் வியாழநாட்டம் கொள்ளாரடிகிளியேநாட்டம் கொள்ளாரடி எனப் பாடவேண்டி வரும்.

# தீர்க்காயுளும், ஆரோக்கியமும் பெற்று வாழ

# தினமும் பிராணாயாமம் செய்வது நலமாகும்

அட்டாங்க யோகத்தில் பிராணாயாமம் நான்காவது இடத்தை வகிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் சகல சம்பத்துக்களையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற பெருங்கருணை கொண்டு இறைவன் ஒவ்வொருவருக்கும் அறிவு என்னும் ஆற்றலைத் தந்துள்ளான் அதனைப் பயன் படுத்தி பெருவாழ்வு பெறுவது ஒவ்வொருவரது தலையாய கடமையாகும். இதனைத் தெரிந்து கொள்ளாமல் அறிவு எனனும் பெரும் செல்வத்தை தன்னுள் வைத்துக் கொண்டு வாழத் தெரியாது விழிச்சப் பாதையில் செல்கின்றார்களே! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையலாமா? இந்தப் பரிதாப நிலைக்குள்நாம் வாழலாமா? என் மனம் எப்பொழுதும் சோம்பலையே விரும்புகின்றது; அதனாலேதான் நான் சோம்பி தூக்கத்திற்கு இடங்கொடுத்து வாழ்நாளை வீண்நாள் ஆக்குகின்றேன். இந்த நிலையைச் சிந்தித்தால் சிரிப்பு வரும்: மனம் நொந்தால் அழுகை வரும்: தலையில் கைவைத்து சோகப் பெருமூச்சு விடவேண்டாம்;

### மேன்மை பெறலாம்

சுகமாக உயர்வாக வாழ வாழ்ந்து வழிகாட்டிய பெரியார்களின் போதனைகள் உள்ளன; அவை உள்ளத்திற்கு சுவையானவை: நீண்ட வாழ்விற்கு உயிரானவை: ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கும், ஆரோக்கியமாக அழகாக இருப்பதற்கும் பிராணாயாமப் பயிற்சி இன்றியமையாதது. பிராணாயாமம் என்றால் வானத்தில் பறப்பதும், நீரின்மேல் நடப்பதும், நெருப்பின் மேல் இருப்பதும் கண்முன் வந்து நிற்கலாம், அவை எல்லாம் நம் போன்றவர்களுக்கு சிந்திக்கக் கூடியவை அல்ல; தினமும் ஒழுங்காக பிராணாயாமம் செய்து வந்தால் மேன்மை பெறலாம்;

'பிராணா' என்பது மிகுந்த உயர்நிலை சக்தியாகும்: அது இல்லாத இடமே இல்லை. எங்கெங்கு மாறுபாடுகளும், சலனங்களும் உள்ளதோ அங்கெல்லாம் பிராணாவின் நிறைவைக் காணலாம்: இப் பிராணாவில் தான் வாயுக்கள் பரவுகின்றன. கோள்கள் உலாவுகின்றன; அண்டசராசரங்கள்சிருஷ்டி, ஸ்திதி, லயத்திற்கு உட்படுகின்றன. சூரியன் எரிகின்றான்; சந்திரன் குளிர் கிரணங்களைப் பொழிகின்றான். தாமஸம், ராஜஸம், ஸத்வம் என்ற முக்குணங்களையும் ஊடுருவி பாதித்து மேலே நடப்பதும் இதுவே என பதஞ்சலி மாமுனிவர் தனது யோக சூத்திரத்தில் கூறுகின்றார். பிராணாயாமம் என்றால் மூச்சை அடக்குவது என்ற எண்ணம் தவறானது.

பிராணா என்றால் சுவாசம், ஆயாமம் என்றால் சீராக தீர்க்கமாகசுவாசத்தை வெளி விடுதல் என்பதாகும்;

### ஆனந்த வாழ்க்கை

அன்பு நேயர்களே! நோயோடு பாயும் படுக்கையுமாகப் போராடி வாழும் வாழ்க்கை வேண்டுமா? ஆரோக்கியமாக ஆனந்த வாழ்க்கை வேண்டுமா என உங்களையே நீங்கள் கேட்டுப் பாருங்கள். நல்லதொரு விடைகிடைக்கும் ஓட்டமும் நடையுமாக இன்றுள்ள அவசர வாழ்க்கையில் உங்களால் எப்படி ஒழுங்காக சுவாசிக்க முடியும். குறுகிய சுவாச ஓட்டம் உங்கள் ஆற்றலை பெருக்கவில்லை; ஆரோக்கியமும் ஏற்படவில்லை. பிராணன் மிக நுண்ணியது. எடுத்தவுடன் அதை நேரில் தாக்கி ஆள முடியாது. அதனுடைய படைப்பான மூச்சின் மூல

**உருவில் சக்தி தியாகராசா**

மாகவே அதைத் தாக்கி கைப்பற்ற முடியும்; இவ்வுடலின் அனைத்து உறுப்புக்களும் தத்தம் வாழ்விற்கு மூச்சையே துணை கொண்டு இருக்கின்றன. இந்த மூச்சின் அருமை பெருமையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பாரத நாட்டு யோகிகள் கூறியுள்ளனர். உடலில் உயிர் ஓங்கி உழைப்பதும், வளருவதும், இரத்த ஓட்டத்தினாலேயாகும். இரத்தத்திற்கு அந்த சக்தி பிராணவாயுவால் கிடைக்கிறது. நல்ல இரத்தம் உடல் முழுவதும் பரவி பழுது போனதை எரித்துபுத்துயிர் அளித்து சதை அணுக்களை நல்ல நிலையில் வைக்கின்ற பிராணவாயு வெட்ட வெளியில் இருந்து தான் கிடைக்கின்றது; இந்தா இந்தப் பழசை புதிதாக அனுப்பு என கட்டளை இடுகிறது; இதயம். : நுரையீரல் அப் பணியை ஒழுங்காக செய்வதற்கு உதவுவது இம் மூச்சுக் காற்றாகும். அதி முக்கியமான பிராணனை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் நீங்கள் ஆற்றல் மிக்கவராக ஆகலாம்;

### பிராணாயாமம்

பிராணாயாமம் என்பது விரிந்த ஆழ்ந்த பொருட்களை உடையது. ஆழ்ந்த நிலையில் பிராணாயாமம் செய்தால் எட்டாத தொலைவில் உள்ள பல உயர் நிலைகளை அடையலாம். பிராணாயாமப் பயிற்சியில் ஈடுபடும் போது உணவுக் கட்டுப்பாடு வேண்டும். முக்கியம் மசாலைப் பொருட்களை நீக்கி விட்டு இயற்கையான உணவை உண்ணுதல் வேண்டும். நாம் 1 நிமிடத்தில் 16 முறை சுவாசிக்கின்றோம். இந்த 1 நிமிடத்தில் 8 முறை ஆக்கினால் 16 தடவைகள் சுவாசிக்க இரு நிமிடங்கள் ஆகின்றன. இதனால் 1 நிமிட ஆயுள் கூடுகின்றது. நீண்ட சுவாசத்தால் மார்பு அதிகமாக விரிந்து சுருங்குவதால் உடலின் நடுப் பகுதியிலேற்பட்ட பல நோய்கள் நாளடைவில் நீங்கி விடும்.

பிராணாயாமத்தின் அபார சக்தியைப் பிராணிகளின் சுவாசத்தில் கூடக் காணலாம். வாழ்க்கையின் வசதிகளையும் உயிர் இனத்தின் அறிவு முன்னேற்றத்தையும், இயற்கையே துணை புரிகின்றது. குளிர்காலத்தில் தவளைகள் உணவு உட்கொள்வதில்லை பாம்புகளும் வெறும் காற்றையே உணவாகக் கொள்கின்றன. புலனடக்கமும் தேக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் பெற யோகிகளுக்கு பிராணாயாமப் பயிற்சி உதவுகின்றது. பிராணாயாமம் என்பது மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்தி நிதானமாக, கால அளவோடு சுவாசிக்கும் பயிற்சியாகும். இதனை எல்லோரும் பயின்றால் நீண்ட ஆயுளையும் நிறைவான ஆரோக்கியத்தையும் அறிவாற்றலையும் பெறலாம்; குறைவாகவும் மெதுவாகவும் மூச்சு விடும் மனிதர்களுக்கு ஆயுட்காலம் அதிகமாகும்; சர்ப்பம் ஒரு நிமிடத்தில் 7 தொடக்கம் 8 தடவை சுவாசிக்கின்றது. 120 வருடம் வாழ்கின்றது; ஆமை ஒரு நிமிடத்தில் 4 தொடக்கம் 5 முறை சுவாசிக்கின்றது. ஆனால் 155 வருடம் வாழ்கின்றது. ஆனால், மனிதன் 1 நிமிடத்திற்கு 12முதல்16தடவை சுவாசிக்கின்றான். இதனால் 100 வருடம் வாழ்கின்றான்; முற்கால மனிதர் நிமிடத்திற்கு 11 தொடக்கம் 12 தடவை சுவாசித்தார்கள்; இன்று உள்ள மக்களோ நிமிடத்திற்கு 15 முதல் 16 தடவை சுவாசித்து வருவதினால் ஆயுள் குறையும் ஆரோக்கியக் குறைவும் ஏற்படுகின்றது. எனவே நாம் ஒருநாளைக்கு 21, 600முறை சுவாசிக்கின்றோம்;

### ஆயுள் குறையும்

அதிகமாக சுவாசித்தால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். உடம்பு திடமாகும். சுறுசுறுப்பாக இருக்கும். ஆனால் ஆயுள்குறையும். பிராணாயாமப் பயிற்சிகளை யோகாசான்கள் மூலம் பயில வேண்டும். பிராணாயாமப் பயிற்சியைத் தினமும் செய்து வந்தால் வலிமைவளரும். முகத்தில் எப்பொழுதும் இளமைப் பொலிவு வீசும். கண்பார்வைத் தெளிவும், புத்திதீட்சண்யமும் ஏற்படும். நாள்தோறும் சுவாசத்தை விரைவாக செலவழித்து வந்தால் அற்ப ஆயுளுடன் வாழ்வு முடிந்து விடும். வாழ்க்கையில் முன்னேறத்துடிக்கும் இளம் சமுதாயத்தவர்களே! பிராணாயாமம் செய்வதில் ஈடுபடுங்கள்; நாம்சிறியகுறுகிய சுவாசத்தை நிறுத்தி, ஆழ்ந்த நீளமான சுவாசத்தை செய்தலே பிராணாயாமம் ஆகும். நாம்பேசும்போது 12 அங்குலம் சுவாசம் வெளியில் சென்று 8 அங்குலம் உள்ளே சென்று 4 அங்குல சுவாசம் நட்டமடைகின்றது. நாம் ஓடும்போது 54 அங்குல சுவாசம் வெளியேசென்று 27 அங்குல சுவாசம் உள்ளே செல்கின்றது. 27 அங்குல சுவாசம் நஷ்டமடைகின்றது; நாம் உறங்கும்போது 48 அங்குல சுவாசம் வெளியே சென்று 30 அங்குல சுவாசம் உள்ளே செல்கின்றது. 18 அங்குல சுவாசம் விரயமாகின்றது. நாம் நடக்கும் போது 16 அங்குல சுவாசம் வெளியே சென்று 8 அங்குலம் நஷ்டம் ஏற்படுகின்றது. நாம் தொழில் புரியும்போது 20 அங்குல சுவாசம் வெளியே சென்று 10 அங்குல சுவாசம் உள்ளே செல்கின்றது 10 அங்குல சுவாசம் வீணாகின்றது. நாம் உடலுறவு கொள்ளும்போது 64 அங்குல சுவாசம் வெளியே சென்று 24 அங்குல சுவாசம் உள்ளே செல்கின்றது. 40 அங்குல சுவாசம் நஷ்டம் ஏற்படுகின்றது;

### ஆயுளும் ஆரோக்கியமும்

''ஆகாதன விட்டிதாயினுங் கேடில்லை போகா புகலாக்கடை'' என வள்ளுவர் குறள் மூலம் கூறுகின்றார். அதாவது மேற்படி ஏற்படும் சுவாச நஷ்டத்தை இரவில் நாம் படுக்கும் பொழுது இடது கைகீழாக வைத்துப்படுத்தால் சரிசெய்து கொள்ளலாம்; பிராணாயாமத்தில் 1 நிமிடம் சுவாசத்தை உள்ளுக்கு இழுத்துநிறுத்திப் பழகிக் கொண்டால் ஒரு பிராணாயாமத்திற்கு 15 சுவாசங்கள் மிச்சமாகும். நாள்தோறும் 10 பிராணாயாமம் செய்து வந்தால் 150 சுவாசம் மிச்சமாகும். எனவே நாள் ஒன்றிற்கு சுவாசிக்கும் 21, 600 சுவாசத்தை 21,400 சுவாசமாக சுவாசித்தால் 120ஆண்டு காலம் வாழலாம். இதன் அடிப்படையில் தான் ''எண்ணில்லாகோடியுகம் இருந்தேனே'' என்று திருமூலர் பாடியுள்ளார். ஆசனப்பயிற்சியால் நோயற்ற நல்லஉடலும் பிராணாயாமத்தால் ஆரோக்கியமான நீண்ட ஆயுளையும் பெறலாம். பிராணாயாமத்தின் முதற்படி நாடிசுத்தியாகும். இந்த நாடிசுத்தி எமக்கு இரண்டு விதமான நன்மைகளைத்தருகின்றன, ஒன்று நுரையீரலில் பிராணவாயுவை நிரப்பி இரத்தத்தை சுத்தம்செய்து; கரியமலவாயுவை அகற்றுகின்றது. மற்றொன்று பிராண என்ற சக்தியை எமக்களிக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு பிராணாசக்தி எம்மிடம் நிறைகின்றதோ அவ்வளவிற்கவ்வளவு பூரண மனிதனாகின்றோம். இதனால் ஆரோக்கியம், ஆனந்தம், சாந்தம், அறிவு, தேஜஸ் ஆகியன அமைகின்றன. செலவாகும் பிராணாசக்தியை தினமும் செய்யும் பிராணாயாமப் பயிற்சி ஈடுசெய்கின்றது. நாடி சுத்தி செய்வதற்கு முன்பு கை, கால், முகம்சுத்தம் செய்து; மூக்கில் சளி முதலியவை அடைத்து கொண்டிராமல் மூக்கைச்சுத்தம்செய்து கொள்ளவும்.

(தொடரும்)

(அச்சுவேலி நாவலம்பதி, காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவை ஒட்டிய கவிதை)

## காட்சியளிக்க வருகின்றான்

நாட்டிற் சிறந்தபதி நாவற் காட்டிலே
நாடி உறைகின்ற நாயகன்
வேட்டுவக் குலத்தில் பெண்ணை வேட்டவன்
வேதியர் போற்றுகின்ற வேலவன்
தீட்டிக் கதைபொறித்த திருத் தேரினில்
தெய்வயானை வள்ளிசேரவே
காட்டுமலைக் கந்தனெனும் பெயர் கொண்டு
காட்சி யெமக்களிக்க வருகின்றான்:

மதிவாணர்

## நேர்முக தேர்வு

(யாழ்ப்பாணம)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் நடத்தும் சமூக சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை காலை 9 மணி முதல் சங்கத்தில் நடைபெறவுள்ளது:

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் குறிப்பிட்ட நேரஒழுங்கின்படிசமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (உ-104)

# மண் மீட்பில் 2000 தோழர்களை நாம் இதுவரை இழந்துள்ளோம்!

## தியாகிகள் தினத்தில் சுபத்திரன் உரை

(யாழ்ப்பாணம்)

மண்மீட்பு போரில் இரண்டாயிரம் தோழர்களை இதுவரை நாம் இழந்துள்ளபோதும், எம்மக்கள் இன்று வரை நிம்மதியாக வாழமுடியவில்லை என்று நேற்று நடைபெற்ற தியாகிகள் நிகழ்வில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் யாழ். பிராந்திய அமைப்பாளர் த. சுபத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் நாம மக்களுக்கு எதிரானவர்களல்லர்; அவர்களுடன் சேர்ந்து வாழவே ஆசைப்படுகிறோம்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு மக்கள் அனைவரும் அமைதி சமாதானமாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம்: அதுவே எமது உயிர் நீத்த தோழர்களின் கனவாகும் அவர்களின்கனவும் எமது விருப்பமும் கூடிய விரைவில் நாட்டில் ஏற்பட நாம் அனைவரும் கூடிபிரார்த்திக்கவேண்டும்

எம்மைவிட்டுப்பிரிந்த தோழர்களின் பெற்றோர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இன்றையநிலையில் நாம் அவர்களை பெரிதாக கௌரவப்படுத்த முடியவில்லை எனினும் நாட்டில் அமைதி ஏற்படும் போது அவர்கள் உயர்நிலையில் வைத்து போற்றப்படுவர். என்றும்சுபத்திரன் தெரிவித்தார் (இ-06-10)

---

### படையிலும்...

இதனால எதிர் காலத்தில் படையினருக்கு ஏற்படப்போகும்ஆபத்தைத்தவர்க்க, சிறிய குடும்பமே அழகிய குடும்பமென்ற கொள்கையைவிடுத்து குழந்தைகளை அதிகப்பெற்று நாட்டுக்கு சேவையாற்ற சிங்களப்பெற்றோர் முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்; (இ)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
இன்று முதல் குதூகல ஆரம்பம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00 5 00 [பு நே]
(கி-2125)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
இன்று முதல்
விஜயகாந், மீனா நடித்த
**சேதுபதி IPS**
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு. நே]
(3264)

---

### தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தொண்டராசிரியர் நேர்முகத் தேர்வில் பங்குபற்றி, கல்வி அமைச்சின் 8/01/02/01/(13) இலக்கம் கொண்ட 28-122-000 ம் திகதிய கணணிப்படிவத்தை இதுவரை பூர்த்திசெய்து வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கையளிக்காத தொண்டர் ஆசிரியர்கள், அவற்றை கையளிக்க வசதியாக, சகல ஆவணங்களுடனும் மற்றும் பாடசாலை அதிபரின் உறுதியுரையுடனும் நாளைகாலை 9 30மணிக்கு, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு வருமாறு, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ்.என். தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்; (இ)

---

### மட்டு...

நேற்றுக் காலை 10.00மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடியமாணவர்கள் அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வளாகத்துக்குமுன்னால் உள்ளபிரதான வீதியில் இறங்கி, சுமார் இருமணித்தியால ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை மாணவர்களின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக உயர் இராணுவ அதிகாரிகள்குழு பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து நேற்று நண்பகல் பேச்சு நடத்தி யுள்ளனர்; (இ)

---

### பிரபா...

போதிலும்அவைஎதுவும்தமது பணிகளைச்சிறப்பாக நிறைவேற்றவில்லை அதற்குப் பதிலாக வீணானகால தாமதத்தையே அவை ஏற்படுத்திவந்தன குழுக்கள் அமைப்பதை விடுத்து சர்வமதக் குழுவினரான நீங்கள் தென்னிலங்கை சென்றவுடன் ஜனாதிபதிசந்திரிகாவிற்கு அழுத்தம் கொடுத்து விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தையை உடன் ஆரம்பிப்பதற்குவேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தில் தாமதமாகும்ஒவ்ஒரு நிமிடமும்பயங்கர விளைவுகளை ஏற்படுத்துவதாகவே அமையும்;

என்று கூறிய சுவாமி சித்ருபானந்தா இனப் பிரச்சினைத் தீர்வில் அரசியல் வாதிகளை இனியும்நாம் நம்ப முடியாது. அவர்களால்த்தான் இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் பூதாகாரமாக வளர்ந்துள்ளது எனவே இதற்கு காலம் தாழ்த்தாதுஅரசுமுடிவுகாண வேண்டும் என்றும் கூறினார்.

இச்சந்திப்பில்சர்வமதக்குழுவினருடன் கீரிமலை, நகுலேஸ்வரஆதீனகர்த்தா நகுலேஸ்வரக்குருக்கள். இந்துசமயபீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள் தென்னிந்திய திருச்சபைஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்சுகாதாரதிணைக்கள பணிப்பாளர்செல்வி உமாசிவபாதசுந்தரம், யாழ் போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் ஆகியோர்கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் நல்லூர் பிர. சபைத்தலைவர் க:மணிபல்லவராஜன், வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் திரிலோகநாதன், பருத்தித்துறை பி சபை தலைவர் ஐ. சிறிரங்கேஸ்வரன், வலிகிழக்கு பி சபைதலைவர் பூ. குணசிங்கம், நெடுந்தீவுபிரதேசசபைத்தலைவர் ஏ டபிள்யு. அரியநாயகம் வேலணை பிரதேசசபை தலைவர் கருணாகரகுருமூர்த்தி ஆகியோரும்கலந்துகொண்டனர்; (வ-9-77-15)

---

## வலம்புரியின் செய்திக்கு கோப்பாய் கலாசாலை மாணவர்கள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வலம்புரியின் நேற்றைய பதிப்பில் ''கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பகிடிவதை'' என வெளியான செய்தியில் எதுவிதஉண்மையுமில்லையென மேற்படி கலாசாலையின் மாணவர் மன்றம் விடுத்த மறுப்பறுக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோப்பாய் ஆசிரியகலாசாலை மாணவர்கள் நிர்வாகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளை அனுஷரித்து நடப்பவர்களெனவும், செய்தியில் குறிப்பிட்டவாறு பகிடிவதை எதுவும் நடைபெறவில்லையெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி அவர்களும் உறுதி செய்துள்ளார்.

இதேவேளை பகிடிவதைச் செய்தி தொடர்பாக கோப்பாய்கலாசாலையில் இணைந்து இயங்கும் யாழ் கல்வியல் கல்லூரி மாணவர் மன்றம் விடுத்த செய்திக் குறிப்பில் எந்தவிதமான பகிடிவதைகளும் அங்குஇடம்பெறவில்லை எனவும், தமது மாணவர்கள் பகிடிவதை குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

கோப்பாய் மற்றும்பலாலி ஆசிரியர் பயிற்சிகலாசாலைகள் கண்ணியம் க்கட்டுப்பாட்டுடன் இயங்கும் கல்விக்கூடங்கள்என்பது அறிந்தவொன்றே எனினும் சில அனுமதிக்கப்படக்கூடிய நிகழ்வுகள் சில வேளைகளில் செய்திகளாக பிரசுரமாகி யிருக்கக்கூடும்.

அதற்குகாரணம் தங்கம் புடம் போடப்படவேண்டுமென்பதற்காகவே ஒழிய யாரின் மனதையும் நோகடிப்பதற்காகவல்ல இவ்வாறு குறித்தசெய்தி யாரையும் மனம் வருத்தியிருப்பின் அதற்காக வருந்துகிறோம்; (ஆ-ர்)

---

### விடுதலைப் ...

கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதுடன், அரசுக்கும் அழுத்தம் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வமதக் குழுவினர் முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்: (வ- 77)

---

### பிரிட்டிஷ்...

குடநாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாணம் வரும் தூதுவர் லிண்டா, தங்கியிருக்கும் நாட்களில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும், அரசு அதிகாரிகளையும் சந்திக்க திட்டமிட்டுள்ளார்; (இ)

---

## புலிகளின் தடையை நீக்காததால் அரசுமீது நம்பிக்கையிழந்துள்ளோம்

### பிரி. தூதுவரிடம் கூட்டணி எடுத்துரைப்பு

(கொழும்பு)

அரசாங்கம் இனப்பிரசினையைத் தீர்க்கவோ, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவோ உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை. இதனால் அரசுமீது நாம் நம்பிக்கை இழந்துள்ளோம்;

இவ்வாறு பிரித்தானிய தூதரகத்தில் தூதுவர் லிண்டாடபீல்ட்டைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவினர் அரசு மீதான தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

நேற்று சுமார் ஒரு மணி நேரம் இடப்பெற்ற இச்சந்திப்பில் கூட்டணிக் குழுவினரின் சார்பில் கட்சியின் உப தலைவரும் எம். பியுமான வீ. ஆனந்தசங்கரி, எம். பிக்களான மாவை சேனாதிராஜா, சிவசுகாராஜாமற்றும் யாழ். மாநகர சபை மேயர் என். ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது அரசாங்கம் தமிழ் மக்களுக்குரிய அரசியல் உரிமைகளை வழங்காது போரை முன்னெடுத்துச் செல்லவே விரும்புகிறது;

யாழ் குடாநாட்டில் ஒன்றரை இலட்சம் மக்கள் அகதிகளாகஉள்ளனர்: அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் போதியதாக இல்லை; போரை முடிவுக்குக்கொண்டு வராமல் குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது வீண் முயற்சியாகும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தடையை நீக்காத அரசாங்கம் எவ்வாறு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போகிறது. தடை நீக்கப்படாமை அரசின் போரை முன்னெடுத்துச் செல்லும் நோக்கையே வெளிப்படுத்துகிறதென கூட்டணிக்குழுவினரால் தூதுவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது; (இ)

---

அன்பு வாசகர்களுக்கு

நயினை நாகபூஷணி அம்பாளின் மஹோற்சவ காலத்தில்,

**‘நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை’**

வலம்புரியில் வெளியாகும். உங்கள் ஆக்கங்கள் (எட்டு வரிகளுக்கு மேற்படாமல்) எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பு:- கவிதைக்குடும்ப அங்கத்தவர்கள் தவறாது தமது இலக்கத்தைக் குறிப்பிடவும்.

ஆசிரியர்

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....

**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, . . . யாழ்ப்பாணம்.
**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**நகுலா நகைமாடம்**
241பு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[கி-2003]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;